# ரோஜாச் செடி

அழ. வள்ளியப்பா



கொடுத்துவைக்கவில்லை. உம், யாருக்கு இருக்கிறதோ அதிர்ஷ்டம்!" என்றாள் மீரா.

உடனே கமலாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. "மீரா, நீ கவலைப்படாதே நான் சொல்லுகிறபடி செய். நிச்சயம் உனக்குத் தான் பரிசு" என்றாள்.

"என்ன ! பரிசு எனக்கா ! அது எப்படி ?" என்று கேட்டாள் மீரா.

"நாலாவது தெருவிலே ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறதே, அதற்குப் பக்கத்திலே ஒரு குடிசை இருக்கிறது. அந்தக் குடிசையிலே பார்வதி என்று ஒருத்தி இருக்கிறாள். அவளும் காந்தி இலவசப் பள்ளிக்கூடத்தில்தான் படிக்கிறாள் ஏழாவதிலே படிக்கிறாள். அவளை எனக்குத் தெரியும். நேற்று அவளுடைய வீட்டுக்குப் போயிருந்தேன். அவள் ஒரு ரோஜாச் செடி வளர்த்திருக்கிறாள். அடடா ! எவ்வளவு அழகான செடி! எவ்வளவு ரோஜாப் பூக்கள்! அவள் வீட்டுக்கு நாம் இப்போதே போவோம். ஏதேனும் துட்டுக் கொடுத்தால் அவள் அந்தச் செடியைத் தந்து விடுவாள்...."



"உண்மையாகவா ! எவ்வளவு ரூபாய் கேட்பாள் ? பத்துரூபாய் கேட்பாளா ?"

"பத்து ரூபாயா ? அம்மாடியோ ! அவ்வளவு எதற்கு ? ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கொடுத்தாலே போதும்."



வேட்டை நாய்க்குத் தப்ப வழியில்லை. அதனுல், அது சிங்கத்தை எதிர்த்துச் சண்டைபோட ஆரம்பித்தது. ஒளிந்திருந்த மான் குட்டி சிங்கத்தையும் வேட்டை நாயையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே இருந்தது. இரண்டும் ஒன்றை ஒன்று பற்களால் கடித்தன; நகங்களால் கீறின, 'உர்ர்...உர்ர்' 'வள்...வள்' என்று சத்தம் போட்டன. சிறிது நேரத்தில் இரண்டுக்கும் உடம்பெல்லாம் காயம்! தரையெல்லாம் இரத்தம்!

நேரம் ஆகஆக வேட்டை நாய் ஓய்ந்து விட்டது. சிங்கம் சளைக்கவில்லை. வீராவேசத்துடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் வேட்டை நாயின் ஆயுள் முடிந்துவிடும் என்று குட்டி மானுக்குத் தெரிந்து விட்டது. உடனேயே, அதன் உடல் நடுங்கியது; உரோமம் சிலிர்த்தது. பயம் மனத்திலே புகுந்துகொண்டது!